பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 05 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.

2. தமிழக வெற்றிக் கழகம் 108 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

3. தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக திமுகவும், அஇஅதிமுகவும் தெரிவித்துள்ளன.

4. புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் கட்சி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியமைக்கிறது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.

வாக்குப்பதிவு நடைபெற்ற **234** தொகுதிகளுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழக வெற்றிக் கழகம் போட்டியிட்ட **233** தொகுதிகளில் **108** தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருவள்ளூர், ஆவடி, மதுரவாயல், அம்பத்தூர், மாதவரம், திருவொற்றியூர், ஆர்.கே. நகர், பெரம்பூர், ஆயிரம்விளக்கு, செங்கல்பட்டு, திருப்போரூர், காட்பாடி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், குமாரபாளையம், கோபிசெட்டிபாளையம், மேட்டுப்பாளையம், அவினாசி, பல்லடம், கவுண்டம்பாளையம், ஸ்ரீரங்கம், பெரம்பலூர், தஞ்சாவூர், அறந்தாங்கி, காரைக்குடி, மதுரை மத்தி, மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, மதுரை வடக்கு, சிவகாசி, ஒட்டப்பிடாரம், சேலம் தெற்கு, சேலம் வடக்கு, சேலம் மேற்கு உள்ளிட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

சென்னையில் உள்ள **16** தொகுதிகளில் **14** தொகுதிகளில் அக்கட்சி வெற்றி பெற்றது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி 73 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இதில் திமுக 59 தொகுதிகளிலும், காங்கிரஸ் கட்சி 5 தொகுதிகளிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச்சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் தலா 2 தொகுதிகளிலும், தேமுதிக ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன.

இதில் திமுக துறைமுகம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, ஆம்பூர், வந்தவாசி, கோவை தெற்கு, பொள்ளாச்சி, வால்பாறை, உடுமைலைப்பேட்டை, திருவண்ணாமலை, மடத்துக்குளம், ஒட்டன்சத்திரம், ஆத்தூர், திண்டுக்கல், வேடசந்தூர், அரவக்குறிச்சி, குளித்தலை, திருச்சி மேற்கு, மண்ணச்சநல்லூர், சிதம்பரம், சீர்காழி, பட்டுக்கோட்டை, போடிநாயக்கனூர், சாத்தூர், திருச்சுழி, திருச்செந்தூர், கோவில்பட்டி, தென்காசி, பாளையங்கோட்டை, கடையநல்லூர் உள்ளிட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி மயிலாடுதுறை, மேலூர், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய தொகுதிகளிலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வாணியம்பாடி, பாபநாசம் ஆகிய தொகுதிகளிலும், இந்திய

கம்யூனிஸ்ட், தளி, திருத்துறைப்பூண்டி ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கீழ்வேளூர், பத்மநாபபுரம் தொகுதிகளிலும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி காட்டுமன்னார்கோயில், திண்டிவனம் தொகுதிகளிலும், தேமுதிக விருத்தாச்சலம் தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி **53** தொகுதிகளில் வெற்றி பெற்றது.

இதில் அஇஅதிமுக **47** தொகுதிகளிலும், பாமக **4** தொகுதிகளிலும், பிஜேபி, அமமுக ஆகிய கட்சிகள் தலா ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன.

திருத்தணி, செய்யூர், மதுராந்தகம், ஆற்காடு, அணைக்கட்டு, ஜோலார்பேட்டை, பர்கூர், ஓசூர், கலசப்பாக்கம், ஏற்காடு, பரமத்திவேலூர், தாராபுரம், காங்கேயம், பெருந்துறை, தொண்டாமுத்தூர், பழனி, நத்தம், கரூர், லால்குடி, அரியலூர், பன்ருட்டி, நன்னிலம், விராலிமலை, கன்னியாகுமரி உள்ளிட்ட தொகுதிகளில் அஇஅதிமுக வெற்றி பெற்றுள்ளது.

தருமபுரி, செஞ்சி, விக்கிரவாண்டி, ஜெயங்கொண்டம் ஆகிய தொகுதிகளில் பாமக வெற்றி பெற்றுள்ளது.

பிஜேபி உதகமண்டலம் தொகுதியிலும், அமமுக மன்னார்குடி தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளன.

எடப்பாடி தொகுதியில் போட்டியிட்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மாநிலத்திலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட தவெக ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளரான திரு. பிரேம் குமாரை 98 ஆயிரத்து 110 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் திரு. சீனிவாச சேதுபதி ஒரு வாக்கு வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் திரு. பெரியகருப்பனை தோற்கடித்தார்.

இதனிடையே கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதத்தை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

அதிகபட்சமாக தமிழக வெற்றிக் கழகம் 34 புள்ளி ஒன்பது இரண்டு சதவீத வாக்குகளை பெற்றுள்ளது.

திமுக 24 புள்ளி ஒன்று ஒன்பது சதவீத வாக்குகளையும், அஇஅதிமுக 21 புள்ளி இரண்டு ஒன்று சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளன.

காங்கிரஸ் கட்சி 3 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகளையும், பிஜேபி 2 புள்ளி ஒன்பது ஏழு சதவீத வாக்குகளையும், நாம் தமிழர் கட்சி 4 சதவீத வாக்குகளையும், தேமுதிக ஒன்று புள்ளி 2 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அறுதிப்பெரும்பான்மைக்குத் தேவையான 118 தொகுதிகள் யாருக்கும் கிடைக்காத நிலையில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக பல்வேறு கட்சிகளுடன் அக்கட்சி பேச்சுகளில் ஈடுபட்டு வருவதாக தகவல் தெரிவிக்கின்றன.

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைப்பது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் ஆதரவு கோரினால், அதுகுறித்து ஆலோசித்து

முடிவெடுக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் மேலிடப் பொறுப்பாளர் திரு. கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக திமுகவும், அஇஅதிமுகவும் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், மக்கள் தீர்ப்பை தலைவணங்கி ஏற்பதாகவும், வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் ஏராளமான திட்டங்களை உருவாக்கி நல்லாட்சி வழங்கியதாகவும், தேர்தல் களத்தில் அதை எடுத்துக்கூறியே வாக்குகளைக் கேட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நற்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை மக்களுக்காக சிறப்பான ஆளும் கட்சியாக செயல்பட்ட திமுக, இனி சிறப்பான எதிர்க்கட்சியாக செயல்படும் என்று திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், நீதிபதிகளாகிய மக்கள் வழங்கிய முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளார்.

தேர்தலில் எழுச்சியுடன் முன்வந்து ஜனநாயக கடமையாற்றிய அனைத்து மக்களுக்கும் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

இந்தப் பின்னடைவில் இருந்து தமது கட்சி விரைவில் மீண்டுவரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணிக் கட்சியினருக்கும், தங்கள் கூட்டணிக்கு வாக்களித்தவர்களுக்கும் திரு. எடப்பாடி பழனிசாமி நன்றி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுச்சேரியில் உள்ள 30 தொகுதிகளில் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சி 12 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துள்ளது.

பிஜேபி 4 தொகுதிகளிலும், திமுக 5 தொகுதிகளிலும், தவெக இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

கேரளாவில் உள்ள **140** தொகுதிகளில் காங்கிரஸ் **63** தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கிறது.

ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி **26** தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது.

மேற்குவங்கத்தில் உள்ள **294** தொகுதிகளில் பிஜேபி **206** தொகுதிகளில் வென்று முதல் முறையாக ஆட்சியமைக்க உள்ளது.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் **81** தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அசாமில் **126** தொகுதிகளில் பிஜேபி **82** தொகுதிகளில் வென்று ஆட்சியை தக்க வைத்துள்ளது. காங்கிரஸ் **19** தொகுதிகளிலும், போடோலேண்ட் மக்கள் முன்னணி, அசாம் கனபரிஷத் ஆகியவை தலா **10** தொகுதிகளில் வென்றுள்ளன.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹோர்முஸ் நீரிணையை அத்துமீறி கடக்க முயன்ற அமெரிக்க கடற்படைக் கப்பல் மீது இரண்டு ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியதாக ஈரான் தெரிவித்துள்ளது.

------------

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு வளைகுடா பகுதியில் கப்பல்கள் மீது ஈரான் அண்மையில் தாக்குதல் நடத்தியதன் மூலம் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை **6** சதவீதம் அதிகரித்துள்ளது.

------------

இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியை வென்றதைக் குறிக்கும் **81**வது வெற்றி தினத்தை ரஷ்யா, இம்மாதம் **8, 9** ஆகிய தேதிகளில் கொண்டாடப்படுவதை அடுத்து யுக்ரைன் மீதான சண்டை நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

------------

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோல்வியடைந்ததையடுத்து, முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

------------

பல்வேறு வழங்குகளில் தொடர்புடைய தலைமறைவு குற்றவாளி நவாஸ் காக்கட்-ஐ ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

------------

கடந்த ஏப்ரல் மாதத்தில் 2 புள்ளி ஒன்று ஐந்து லட்சம் டன் வர்த்தக சிலிண்டர்கள் விற்பனையாகியுள்ளதாக பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

மும்பையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 228 ரன் எடுத்தது.

**229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 18 புள்ளி 4 ஓவரில் இலக்கை எட்டி வெற்றி பெற்றது.**

**--------------**

**உலகக் கோப்பை ஜூனியர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Yash Khandagale வெள்ளிப் பதக்கம் வென்றார்.**

**எகிப்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் 71 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.**

**--------------**

**உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று ஆஸ்திரியாவை எதிர்கொள்கிறது.**

**லண்டனில் நடைபெறும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா, அமெரிக்காவை எதிர்கொள்கிறது.**

**<<<<The End>>>>**